தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.09.2013**

## சென்னையில் இன்று மழை வாய்ப்பு

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் புதன்கிழமை (செப்.18) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது. இதன் காரணமாக சென்னை உள்பட வட தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது.

இந்நிலையில் ஆந்திரத்தின் வட கடலோரப் பகுதிக்கும், தமிழகத்தின் தெற்கு கடல் பகுதிக்கும் இடையே புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை திங்கள்கிழமை உருவாகியுள்ளது. இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது:

வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலையால் பலத்த மழை பெய்ய வாய்ப்பில்லை. ஆனால் சென்னை உள்பட தமிழகத்தின் ஒரு சில இடங்களில் மழை பெய்யக் கூடும் என்றனர்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

வால்பாறை - 50, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 40, நீலகிரி மாவட்டம் தேவலா, வேலூர், செங்கோட்டை - 30, பேச்சிப்பாறை, பெரியாறு, பாபநாசம், திருவண்ணாமலை மாவட்டம் போளூர், கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டி, கோத்தகிரி - 20.

## விவசாயிகளுக்கு பயிற்சி

திண்டிவனத்தை அடுத்த ஓமிப்பேர் கிராமத்தில் விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நெல் நடவு குறித்த செயல்விளக்கப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண் உற்பத்தியினை அதிகரித்திட பண்ணை இயந்திரத்தின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டபோது வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி மணிபாலனின நிலத்தில் விவசாயிகளுக்கு இப்பயிற்சியினை அளித்தார்.

---

## கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை உடனே வழங்க வலியுறுத்தல்

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை புதுவை அரசு உடனே பட்டுவாடா செய்ய வேண்டும் என அகில இந்திய விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

சங்கத்தின் புதுச்சேரி பிரதேசக் குழுக் கூட்டம் தலைவர் சீ.பத்மநாபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. செயலர் வே.சங்கர் செயலறிக்கைத் தாக்கல் செய்தார். தமிழ் மாநிலப் பொருளாளர் என்.நாகப்பன் சிறப்புரை ஆற்றினார்.

நிர்வாகிகள் ஆர்.ராமமூர்த்தி, கே.கருணாகரன், டி.முத்துலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

புதுவையில் கரும்பு விவசாயிகள் நாளுக்கு நாள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

கரும்பு சாகுபடியில் போதிய லாபமில்லை. கட்டுபடியாகாத விலை, உரத்தட்டுப்பாடு, உர விலை உயர்வு, உரிய காலத்தில் பணப் பட்டுவாடா செய்யாதது போன்றவற்றால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் கடந்த 2011-12-ல் விவசாயிகள் வாங்கிய கடனை உரிய காலத்தில் செலுத்தாததால் வட்டியை அதிகரித்து விட்டது.

இதனால் விவசாயிகள் தங்கள் கரும்பைத் தனியார் சர்க்கரை ஆலைக்கு அனுப்பும் நிலை உள்ளது.

புதுச்சேரி அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை பாதுகாக்கவும், கரும்பு வெட்டி அனுப்பிய விவசாயிகளுக்கு உடனே நிலுவைத் தொகையை அனுப்பவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தீவனங்கள் வழங்க வேண்டும் புதுவை ஊசுடு ஏரியில் உள்ளத் தாமரைச் செடிகளை

அகற்றவும், மீன்களைப் பிடித்து விற்கவும் அரசே ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பருவமழை முன்னெச்சரிக்கை ஆலோசனைக் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வடகிழக்குப் பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பருவமழை காலத்தில் ஏற்படக் கூடிய மழை வெள்ள பாதிப்பு மற்றும் மீட்புப் பணிகள், குடிநீர்த் திட்டம் மற்றும் நீர்நிலை பராமரிப்பு, சுகாதாரப் பணிகள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பு, மின் விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மழை வெள்ள பாதிப்பு குறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறைக்கு 04546-254956 என்ற தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று ஆட்சியர் தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சோமுபாண்டியன், மருத்துவப் பணிகள் இணை இயக்குநர் சின்னப்பா, வருவாய் கோட்டாட்சியர்கள் ஜானகி, ராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரோஜா உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## கச்சாப் பருத்தி, நூல் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வலியுறுத்தல்

கச்சாப் பருத்தி, நூல் ஏற்றுமதிக்குத் தடை விதிக்க வேண்டும் என்று, ஈரோடு மாவட்ட அனைத்துத் தொழில் வணிகச் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் சாம்பசிவ ராவுக்கு, இக் கூட்டமைப்புத் தலைவர் என்.சிவநேசன் திங்கள்கிழமை அனுப்பியுள்ள மனு:

இந்தியாவில் உற்பத்தியாகி இருக்கும் 3.35 கோடி பருத்தி பேல்களில் 2.85 கோடி பேல்கள் உள்நாட்டுக்கே தேவைப்படுகின்றன. மீதமுள்ள 50 லட்சம் பேல்களை இருப்பில்

வைக்க வேண்டிய மத்திய அரசு, ஏற்றுமதியைக் குறிக்கோளாகக் கொண்டு இதுவரை 90 லட்சம் பேல்களை ஏற்றுமதி செய்துவிட்டது.

இதனால், கடந்த மார்ச்சில் ரூ.36,000க்கு விற்ற 1 பேல் பருத்தி, இப்போது ரூ.55,000 ஆக உயர்ந்துவிட்டது. இதனால், நூல் விலை 25 முதல் 45 சதவீதம் வரை உயர்ந்துவிட்டது. கடந்த மார்ச்சில் 1 கிலோ ரூ.230 ஆக இருந்த நூல் விலை ரூ.270 ஆக உயர்ந்துவிட்டது.

உள்நாட்டுத் தேவைக்கே பற்றாக்குறை இருக்கும் நிலையில், அயல்நாட்டு வர்த்தக இயக்குநரகம் மூலமாக இதுவரை 590 மில்லியன் டன் நூல் ஏற்றுமதிக்குப் பதிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதில், 65 சதவீதத்திற்கும் மேலாக நமது போட்டி நாடான சீனா மற்றும் வங்கதேசத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அடுத்த பருத்தி அறுவடை வரும் வரை (3 மாதங்கள்) பருத்தி ஏற்றுமதி செய்வதை தடை செய்ய வேண்டும். நூல் ஏற்றுமதியை உள்நாட்டுத் தேவைபோக செய்ய வேண்டும். பருத்தி, நூல் வங்கிகள் நாடு முழுவதும் தொடங்கப்பட வேண்டும்.

இந்தியப் பருத்திக் கழகம் பருத்தியை கொள்முதல் செய்து நேரடியாக மில்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். முக்கியமாக பருத்தி வணிகர்கள், இடைத்தரகர்களுக்கு பருத்தியை விற்பனை செய்யக் கூடாது.

யூக வணிக பேரத்தில் இருந்து பருத்தி விற்பனையை நீக்க வேண்டும்.

பருத்தியை அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தில் கொண்டு வர வேண்டும்.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களை முக்கிய மாநகரங்களில் தொடங்க வேண்டும்.

ஜவுளித் தொழிலுக்காக கடன் பெற்றவர்கள் திரும்பச் செலுத்த வேண்டிய தவணையை 2 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டும். ஜவுளித் தொழில் நிறுவனங்கள் பெற்ற கடன் மீதான வட்டியில் 5 சதவீத மானியம் வழங்க வேண்டும்.

---

## பருத்தி விவசாயிகளுக்கு இடுபொருள்கள்

கோவையில் இயங்கும் தென்னிந்திய பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (சிமா) சார்பில், சேங்குன்றம் ஊராட்சியில் உள்ள பருத்தி விவசாயிகளுக்கு இலவச இடுபொருள்கள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இடுபொருள்களை அதன் தலைவர் ஜே.கே.என். பழனி வழங்கினார் .

சிமா அமைப்பின் விழுப்புரம் சரக பொறுப்பு அலுவலர் ஆர். கோவிந்தராஜ், வேளாண்மை உதவி இயக்குநர் டி.ஏ. பாபுரவிவர்மன், வேளாண்மை அலுவலர் கே. ராஜு, சேங்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவர் நாகவேணி சொக்கலிங்கம், சங்கச் செயலர் வி.ஜி. நடராஜன், இயக்குநர் அனிதா மதியழகன், முன்னோடி பருத்தி விவசாயி எம். கோவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

## 20-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 20) காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. இக்கூட்டத்துக்கு ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்குகிறார்.

விவசாயிகள் தங்கள் குறைகளை மனுக்களாகவும், நேரடியாகவும் ஆட்சியரிடம் தெரிவிக்கலாம் என ஆட்சியர் அலுவலகச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

---

## விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டம் குறித்து வாலாஜா அருகேயுள்ள அனந்தலை, தென்கடப்பந்தாங்கல் கிராமங்களில் விழிப்புணர்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் மெ.கேசவலு தலைமை தாங்கினார்.

உதவிச் செயற்பொறியாளர் முரளிதரன், பொறியாளர்கள் ராஜேஷ், சந்திரன், அலுவலர் முகமது அஸ்லம், முனைவர் பிரபு, ஏரி பாசன சங்கத் தலைவர் வேலாயுதம், தென்கடப்பந்தாங்கல் ஊராட்சி மன்றத் தலைவர் தட்சிணாமூர்த்தி, துணைத் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

## ஆடுகளை வளர்ப்பது எப்படி? வேலூரில் நாளை இலவசப் பயிற்சி

வேலூரில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆடு வளர்ப்பு பற்றிய இலவசப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சத்துவாச்சாரி, தொலைபேசி எண்.2253022.

---

## வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம்

தருமபுரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையையொட்டி செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது: பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடரை தணிக்கும் வகையில் ஆட்சியரகத்தில் 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1077-க்கு பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

பருவமழைக் காலங்களில் ஏற்படும் நிகழ்வுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை மாதிரி ஒத்திகை பொதுமக்கள் கூடுமிடங்களில் நடத்திக் காட்டுதல், அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்கள், நிவாரண மையங்கள், வட்டாட்சியர் முதல் கிராம உதவியாளர் வரையில் உள்ளவர்களின் தொடர்பு எண்கள் அடங்கிய கையேடு வைத்துக் கொள்வதோடு, அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டும்.

பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மாவட்டத்தில் உள்ள புயல் தடுப்பு நிலையங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் தனியார் திருமண மண்டபங்களைக் கண்டறிந்து பருவமழைக் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களைத் தங்க வைக்க ஏதுவாக உள்ளனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

நீர்த்தேக்கம் மற்றும் ஏரிகளில் தண்ணீர் நிரம்பி உபரிநீர் வெளியேறக் கூடிய சூழ்நிலை ஏற்படும் போது முன்கூட்டியே பொதுமக்களுக்குத் தெரிவிப்பது, தாழ்வான பகுதிகளில்

வசிப்பவர்களை மேட்டுப் பகுதியில் தங்க வைத்தல், மணல் மூட்டைகளைத் தயார் நிலையில் வைத்தல் உள்ளிட்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்ப் பாதிப்புகளை எதிர்கொள்ளத் தேவையான மருந்துகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பயிர்ச் சேதம் மற்றும் பாதிப்பு விவரங்களை உடனுக்குடன் ஆய்வு செய்து தகவல் தருதல் போன்ற பணிகளைச் செய்வதோடு, அனைத்து அலுவலர்களும் தலைமையிடத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும் என்றார் ஆட்சியர்.

மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் சி.க.வீரனன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எச்.ரஹமத்துல்லாகான் மற்றும் அரசு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

---

### பருவ மழை மிதமாக நீடிக்கும்

நாமக்கல் மாவட்டம் முழுவதும் தென்மேற்குப் பருவ மழை மிதமாக நீடிக்கும் என்று மாவட்ட வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 3 நாள்களுக்கு (செப்.18 முதல் 20-ஆம் தேதி வரை) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். பல இடங்களில் 3 முதல் 5 மிமீ வரை மழை பெய்யக்கூடும். காற்று மணிக்கு 5 கிமீ முதல் 8 கிமீ திசைவேகத்துடன் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்தபட்சம் 51 சதம் முதல் அதிகபட்சம் 81 சதம் வரை காணப்படும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: தென்மேற்குப் பருவ மழையின் தாக்கம் மிதமான அளவில் காணப்படுகிறது. இதனால், சிறு அளவில் மழை எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டத்தின் சில இடங்களில் எதிர்பார்க்கப்படும் இந்த மழையால் தண்ணீர், தீவனத்தின் மூலம் ஈகோலை கிருமிகளின் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 11 சதத்துக்கு மேல் ஈரப்பதம் கொண்ட தீவன மூலப்பொருள்களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: தற்போது கிடைக்கும் மழையைப் பயன்படுத்தி நாற்று விடாமல் நேரடியாக நெல் விதைப்பு செய்யலாம். ஒரு ஏக்கர் விதைப்பு செய்ய 10 கிலோ விதை தேவைப்படுகிறது. இரண்டாம் கொம்பு விதையை (ஒருநாள் ஊற வைத்து ஒருநாள் முட்டம் போடுதல்) விதைப்புக் கருவியின் மூலம் வரிசையாக விதைப்பு செய்யலாம். நெல் விதைப்புக் கருவி நாமக்கல் வேளாண் விரிவாக்க நிலையத்தில் செயல் விளக்கத்துக்கு உள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டுக்கோழி வளர்ப்புக்கு ரூ. 82.20 லட்சம் ஒதுக்கீடு

கரூர் மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்துக்காக ரூ. 82.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

கரூர் மாவட்டம், புன்செய் தோட்டக்குறிச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கோழி வளர்ப்புத் திட்டப் பயனாளிகளுக்கான நாட்டுக்கோழி, கறிக்கோழி வளர்ப்புப் பயிற்சியைத் தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது:

கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 50 சத மானியத்துடன் கோழி வளர்ப்புத் திட்டம் கரூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, கடந்தாண்டில் 35 பேருக்கு ரூ. 12.16 லட்சம் ஒதுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்குள் நாட்டுக்கோழி வளர்ப்பு அல்லது கறிகோழி வளர்ப்பு என ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யலாம். நிகழாண்டுக்கு முதல்கட்டமாக 80 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடைப் பராமரிப்புத் துறை, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மையமும் இணைந்து 3 நாள்களுக்கு இந்தப் பயிற்சியை அளிக்கின்றன.

இதை நன்கு பயன்படுத்தி கொண்டு விவசாய நிலத்திலும் கோழி வளர்ப்பைத் தொடங்கலாம். குறைந்த நேரத்தைச் செலவழித்து அதிக லாபத்தை ஈட்ட முடியும்.

கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள், அதற்கு வழங்க வேண்டிய மருந்துகள் வழங்க வேண்டுமென இப்பயிற்சியின் மூலம் தெரிந்து கொள்ள இயலும் என்றார் ஆட்சியர்.

கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கோபிநாத், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் அகிலா, உதவி இயக்குநர் என். குழந்தைசாமி, புன்செய் தோட்டக்குறிச்சி பேருராட்சித் தலைவர் பெரியண்ணன் ரகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உரம் வாங்க விதிக்கப்பட்டிருந்தகட்டுப்பாடுகள் நீக்கம்:கூட்டுறவுத்துறை அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும் உரம் வாங்க விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட தகவல்:

மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் சம்பா பருவத்துக்குத் தேவையான அனைத்து வகையான உரங்களும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அதில், மாவட்டத்திலுள்ள 136 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இருப்பு கிடங்குகளில் யூரியா 2,166 டன், டிஏபி 1,557 டன், பொட்டாஷ் 901 டன், காம்பளக்ஸ் 1,462 டன் மற்றும் கலப்பு உரம் 127 டன் உள்பட மொத்தம் 6,213 டன் அளவில் உரங்கள் இருப்பு உள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை ரொக்கத்துக்கு எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, எவ்வித சான்றுகளும் இல்லாமல் வாங்கிக் கொள்ளலாம். மேலும், இதில் ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால், புதுக்கோட்டை சரக துணைப்பதிவாளரை 94427 58532, அறந்தாங்கி சரக துணைப்பதிவாளரை 91719 57567, புதுகை மத்திய கூட்டுறவு வங்கியை 90477 53397, மண்டல இணைப்பதிவாளரை 94432 77335 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## செப்.20-ல் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம்

நாகர்கோவிலில் விவசாயிகள் கோரிக்கை தினக்கூட்டம் வெள்ளிக்கிழமை (செப்.20) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் இம்மாதம் 20-ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் அரங்கில் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடந்த ஆகஸ்ட் மாத கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள்

வழங்கப்படும். மேலும் விவசாயிகளின் கோரிக்கைகளும் மாவட்ட ஆட்சியரால் நேரில் பெறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குமரி மாவட்டத்தில் சாரல் மழை நீடிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சாரல் மழை நீடித்து வருகிறது.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சாரல் மழை விட்டு விட்டு பெய்து வருகிறது. திங்கள்கிழமை பெய்த மழையால் பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 423 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து விநாடிக்கு 289 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

இதுபோல் பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 444 கன அடி தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து விநாடிக்கு 206 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. பேச்சிப்பாறையில் 22 மி.மீ. மழையும், பெருஞ்சாணியில் 10.8 மி.மீ. மழையும் பெய்துள்ளது. இப்போது பேச்சிப்பாறையில் 21.95 அடி தண்ணீரும், பெருஞ்சாணியில் 58.65 அடி தண்ணீரும் உள்ளது.

மாவட்டத்தில் பிற இடங்களில் பதிவான மழை அளவு விவரம்: பொய்கை- 3 மி.மீ., மாம்பழத்துறையாறு- 18 மி.மீ., நாகர்கோவில்-5.3 மி.மீ., பூதப்பாண்டி- 10 மி.மீ., சுருளோடு- 17 மி.மீ., கன்னிமார் 12.8 மி.மீ., பாலமோர் 38.7 மி.மீ., குளச்சல்-10 மி.மீ., இரணியல்-10 மி.மீ., அடையாமடை- 25 மி.மீ., கோழிப்போர்விளை- 27 மி.மீ மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் அறுவடை தொடங்கி உள்ள நிலையில், மழை பெய்து வருவது விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது.

கருங்கல்:கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை முதல் தொடர்ந்து மிதமான மழை பெய்தது. கருங்கல்,பாலப்பள்ளம், மத்திகோடு, ஆலஞ்சி, குளச்சல், குறும்பனை, கப்பியறை, திப்பிரமலை, நட்டாலம், கிள்ளியூர், புதுக்கடை, கீழ்குளம், திக்கணம்கோடு,பள்ளியாடி, மார்த்தாண்டம் உள்ளிட்ட பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை மிதமான மழை பெய்தது. இதனால் இப்பகுதிகளில் குளிர்ந்த காலநிலை நிலவியது.

## இரண்டு வாரங்களில் வெங்காய விலை குறையும்: கே.வி. தாமஸ்

அடுத்த இரண்டு வாரங்களில் வெங்காய விலை குறையும் என்று மத்திய உணவுத் துறை இணை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு கிலோவுக்கு ரூ.90 வரை விற்பனையான வெங்காயத்தின் விலையைக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைகப்ள் மேற்கொண்டன.

அதையடுத்து, கிலோ ரூ.60, ரூ.70 என விற்கப்பட்டு வந்த வெங்காயத்தின் விலை, செவ்வாய்க்கிழமை ரூ.70, ரூ.80 ஆக விற்கப்பட்டது.

இது தொடர்பாக தில்லியில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் அளித்த பதில்:

இந்தியாவில் வெங்காய விலையேற்றத்தைத் தடுக்கும் வகையில், அதன் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.

இருந்த போதும் சில இடங்களில் வெங்காய வரத்து குறைவைப் பயன்படுத்தி ஊக பேரத்தில் வியாபாரிகள் ஈடுபடுவதாகத் தகவல்கள் வருகின்றன. இதை மாநில அரசுகள்தான் தடுக்க வேண்டும்.

கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் வெங்காயம் விளைவிக்கப்பட்டு அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளது.

அவை இம்மாத இறுதியில் சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும். எனவே, அடுத்த இரண்டு வாரங்களில் வெங்காய விலையும், விநியோகமும் சீரடைந்து விடும் என்று எதிர்பார்க்கிறோம்.

வெங்காயம் உள்ளிட்ட பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தும் விதமாக முக்கியப் பொருள்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு கடந்த மாதம் உயர்த்தியது. வெளிநாடுகளில் இருந்தும் வெங்காயம் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார் தாமஸ்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.09.2013**

விவசாய மலர்

### பண்ணைக் குட்டைகள் ஏன் அவசியம் அதிகாரி விளக்கம்

மானாவாரி பகுதியில் பண்ணைக் குட்டைகளை ஏன் அமைக்க வேண்டும் என்பதற்கு, நீர்மேலாண்மை நிறுவன துணைஇயக்குனர் ராஜேந்திரன் விளக்கமளித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: தமிழகத்திற்கு 32 சதவீதம் தென்மேற்கு பருவமழை காலத்திலும், 48 சதவீதம் வடகிழக்கு பருவமழையாலும், 5 சதவீதம் குளிர்காலத்திலும், 15 சதவீதம் கோடையிலும் மழை கிடைக்கிறது. பருவமழையின் அளவு, பொழியும் நாள், நேரம் ஆகியவற்றை நிர்ணயிக்க முடியாத தன்மை நிலவுவதால், விவசாயம் தொடர்பான முடிவுகள் எடுத்தல், நீர்ஆதாரத்தை பயன்படுத்தும் முறையில் தெளிவின்மை உள்ளது. இதனை சரிசெய்ய பண்ணைக் குட்டைகள் மிகவும் அவசியம். பண்ணைக் குட்டைகளை விவசாய நிலங்களில் எளிதில் அமைக்கலாம். இதற்கு தேர்வு செய்யப்படும் இடம், வயல்களின் மொத்த வடிகால்களையும் ஒருங்கிணைப்பதாக இருக்க வேண்டும். குறைந்தது 10க்கு 10 மீ., நீள, அகலம் உள்ளதாக அமைக்க வேண்டும். மானாவாரியில் 40க்கு 40 மீ., யில் அமைப்பது நல்லது. ஆழம் 2 மீ.,க்கு மிகாமல் இருக்க வேண்டும். பண்ணை குட்டைகளில் நீர் தேக்குவதன் மூலம். அது வீணாவதை தவிர்க்கலாம். இதனால் நிலத்தடி நீர்மட்டம் பெருகும். உபரிநீரின் அளவை பொறுத்து, பண்ணைக் குட்டையில் மீன் வளர்க்கலாம். வீட்டு தோட்டம் அமைக்கவும், பண்ணைக் காடுகள் வளர்க்கவும், நாற்றுக்களை பராமரிக்கவும், கால்நடைகள், இயந்திர சாதனங்களை சுத்தம் செய்யவும் பயன்படுத்தலாம். ஆண்டுதோறும் குட்டைகளை தூர்வாருதல் அவசியம். அங்கு வளரும் பாசி தாவரங்களை அகற்ற வேண்டும். குட்டைகளை சுற்றி மரங்களை வளர்த்து சுற்றுச் சூழலை பேண வேண்டும். இதன் மூலம் பண்ணைக் குட்டையின் முழுப்பலனை பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## காராமணி சாகுபடி



காய்கறி வகையில் காராமணி சாகுபடியானது சற்று சுலபமானது. தனது வேர் முடிச்சுகளில் மணிலா போல் சுற்றியுள்ள தழைச்சத்தினை தனது வேர் முடிச்சுகளில் சேகரித்து வைத்துக்கொள்ளும் திறன் பெற்றது. இக்காரணத்தினால் இப்பயிருக்கு அதிக அளவு எரு, உரங்களை இடவேண்டிய கட்டாய நிலை கிடையாது. இப்பயிரை பூச்சிகளோ வியாதிகளோ பாதிப்பதில்லை.

**சாகுபடி முறைகள்:** பயிரை ஆவணியில் துவங்கலாம். சாகுபடிக்கு தேர்ந்தெடுத்த மண் நல்ல வடிகால் வசதியைக் கொண்டிருக்க வேண்டும். நிலத்தை கட்டிகள் இல்லாமல் உழுது இயற்கை உரங்களை இடலாம். இயற்கை உரங்களை இடுவதற்கு முன் அவைகளில் உள்ள கண்ணாடிகளை அகற்றிவிட்டு உரத்தினை நன்கு பொடிசெய்துவிட்டு சாகுபடி நிலத்தின்மீது சீராகத் தூவ வேண்டும். உடனே எருக்கள் நிலத்தில் மண்ணோடு நன்கு கலக்க வேண்டும். நிலத்தை உழுவது மிக ஆழமாக இல்லாமல் எருவினை மண்ணோடு நன்கு கலக்கும்படி செய்யப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகள் தாங்கள் சொந்தமாக தயாரித்த உரங்களை ஏக்கருக்கு ஐந்து டன் வரை இடலாம். நிலத்தை உழவு செய்துவிட்டு இரண்டு அடி இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். பாரில் அரை அடி இடைவெளியில் விதையினை ஊன்ற வேண்டும். விதை சீராக முளைப்பதற்கு பாசனம் செய்வதோடு அடுத்துவரும் பாசனங்களை கவனமாக கொடுக்க வேண்டும். நிலத்தில் தண்ணீர் தேங்காதபடி பாசனம் செய்ய வேண்டும். பாசனத்தை வாரத்திற்கு இருமுறை செய்ய வேண்டும். வயலில் வெகு சுத்தமாக களையெடுக்க வேண்டும். செடிகளை பாத்தியில் அப்படியே விடலாம். விதை நட்ட 60 நாட்களுக்கு பிறகு அறுவடைக்கு வரும். அதாவது விதைத்த 40-45 நாட்களில் பூக்கள் பிடித்து 60வது நாளில் காய்கள் அறுவடைக்கு வரும். காய்கள் கணிசமான அளவிற்கு நீளமாக இருக்கும்.

**பொருளாதாரம்:** விதை கிரயம் ரூ.1,200, நிலம் தயாரிப்பு ரூ.750, தொழு உரம் ரூ.1,000,

ரசாயன உரம் ரூ.300, பார் அமைக்க ரூ.300, விதைத்தல் ரூ.200, களையெடுத்தல் ரூ.300, அறுவடை ரூ.2,000. மொத்தம் ரூ.6,650.

அரை ஏக்கரில் மகசூலின் மதிப்பு - ரூ.12,000. அரை ஏக்கரில் கிடைக்கும் லாபம் ரூ.5,350.

**நல்ல பயிர்:** சாதாரணமாக மண்வளத்தை பெருக்குவதற்கு விவசாயிகள் பசுந்தாள் உரச்செடிகளை விதைத்து அவைகளை மடக்கி உழுவார்கள். செடியில் அறுவடை முடிந்தவுடன் காராமணி செடிகளை பூமியில் மடக்கி உழலாம். பூமி நல்ல வளம் பெற்றுவிடும். படத்தில் காராமணியின் வளர்ச்சியையும் செழிப்பாக இருக்கும் கொடிகளையும் காணலாம். செடிகளை மடக்கி உழுதால் பூமி வளம்பெறும். வாழை சாகுபடி செய்த தோட்டத்தில் காராமணியை சாகுபடி செய்தால் காய் அறுவடை செய்தபின் செடியை பூமியில் மடக்கி உழலாம்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

---

## நவீன தொழில்நுட்பம்



**காய்கறிகள் சாகுபடி:** வீரிய ஒட்டு கலப்பின ரகங்களைப் பயன்படுத்துதல்: காய்கறிப்பயிர்களின் உள்ளூர் ரகம் அல்லது நாட்டு ரகங்களைப் பயன்படுத்தும்போது விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும். எனவே வீரிய ஒட்டு ரகம் அல்லது கலப்பின ரகங்களைப் பயன்படுத்தினால் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிக மகசூல் பெறலாம்.

**விதைநேர்த்தி:** ஒரு கிலோ விதைக்கு 1 கிராம் என்ற அளவில் டிரைகோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சாணக்கொல்லி மருந்தைக்கொண்டு விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். தக்காளி, மிளகாய், வெண்டை, வெங்காயத்தில் வேர் அழுகல், வாடல், நாற்று அழுகல் நோய்களை இது நன்கு கட்டுப்படுத்தும்.

**நாற்றங்கால்:** விதைகள் தனித்தனியாக நாற்று அட்டை எனப்படும் பிளாஸ்டிக் குழித்தட்டுகளில் உள்ள குழிகளில் விதைக்கப்பட்டு, சீரான வளர்ச்சியும் நிறைந்த வேர் வளர்ச்சியும் கொண்ட வளமான நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குழித்தட்டுகளை சுத்தப்படுத்த தாமிர பூசனக்கொல்லிகளைக் கொண்டு கழுவ வேண்டும்.

வளர்ச்சி ஊடகமாக தென்னை நார்க்கழிவு, தவிடு, கம்போஸ்ட், மணல் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

**நுண்நீர் பாசனம்:** அதிக விளைச்சலுக்கு சொட்டுநீர் பாசனம் சாலச்சிறந்தது. இதில் அதிக நீர்ச்சிக்கனம் ஏற்படுவதோடு களைகளின் தோற்றமும் மிகவும் குறைகிறது. மேலும் உர சத்துக்களையும் பயிர் பாதுகாப்பு பொருட்களையும் சொட்டுநீர் மூலம் பயிர்களுக்கு அளிக்க முடியும். மொத்தத்தில் அதிக நிகரலாபமும், நீர் பயன்பாட்டுத்திறனும் கிடைக்கின்றன. எனவே சொட்டு நீர்ப்பாசனம் காய்கறிப்பயிர்களுக்கு ஒரு சிறந்த முறையாகும்.

**உரமிடுதல்:** மண்ணின் தன்மை அறிந்து, பயிரின் தேவையையும் அறிந்து சரியான உரங்கள் இடுவது, பயிரின் சரியான தருணத்தில் உரமிடுவது, சரியான முறையில் உரமிடுவது அவசியம். இயற்கை உரங்கள், நுண்ணுயிர் உரங்கள், பசுந்தாள் பயிர்கள், ரசாயன உரங்கள், பயிர் சுழற்சிமுறைகள் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து உர நிர்வாகம் செய்வது சிறந்தது.
காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டச் சத்தின் தேவை அதிகம். நுண்ணூட்ட குறைபாடு தென்பட்டாலும், உடனடி நிவாரணம் பெற நுண்ணூட்டச் சத்துக்களை நீரில் கரைத்து இலை வழியாகத் தெளிக்க வேண்டும். சொட்டு நீர்ப்பாசன முறையில் பரிந்துரைக்கப்பட்ட அளவு உரத்தினை செடியின் பருவம் மற்றும் நாட்களின் அடிப்படையில் பிரித்து அளிக்க வேண்டும். (தகவல்: மு.மணிகண்டன், முனைவர் பி.ஜான்சிராணி, காய்கறிப்பயிர்கள் துறை, தோட்டக் கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-661 1270)

**காய்கறி பயிர் - ரகங்கள் - வீரிய ஒட்டு ரகங்கள்**

தக்காளி - கோ.1, கோ.2, கோ.3, பி.கே.எம்.1 - கோ.டி.எச்.1, கோ.டி.எச்.2, த.வே.ப.கழக வீரிய ஒட்டு தக்காளி கோ.3

கத்தரி - கோ.1, கோ.2, பி.கே.எம்.1, எம்.டி.யு.1, பாலூர் 1, பி.எல்.ஆர்.2 - கோ.பி.எச்.1,கோ.பி.எச்.2

மிளகாய் - கோ.2 - த.வே.ப.க. வீரிய ஒட்டு மிளகாய் கோ.1

செடி முருங்கை - பி.கே.எம்.1, பி.கே.எம்.2 - ----

சுரைக்காய் - கோ.1, அர்கா பஹால் - கோ.பி.ஜி.எச்.1, பூசா மஞ்சரி, பூசா வீரிய ஒட்டு-2

பாகற்காய் - கோ.1, எம்.டி.யு. (மதுரை)1, ப்ரீத்தி, அர்காஹரீத் - கோ.பி.ஜி.ஓ.எச்.1, பீசா ஒட்டு-2, என்.டி.பி.ஜி.எச்.7

புடலை - கே.1, கோ.2, பி.கே.எம்.1, எம்.டி.யு.1, பி.எல்.ஆர்.1 - ----

பீர்க்கன் - கோ.1, கோ.2, பி.கே.எம்.1 - ----

---

## ஜீவார்மித கரைசலில் ஜொலிக்குது "பப்பாளி, திராட்சை'



ஜீவார்மித கரைசல்... அக்னி அஸ்திரம்... என இயற்கை உரமிருக்க... செயற்கைக்கு செல்ல வேண்டிய தேவையில்லை என்கிறார், திண்டுக்கல் காந்திகிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜானகிராமன். காந்திகிராமம் செட்டியபட்டியில் மலையடிவாரத்தை ஒட்டி செழித்திருக்கிறது, இவரது தோட்டம். மதுரையில் ஜவுளி பிசினஸ் செய்தாலும், தினமும் தோட்டத்தைப் பார்க்க தவறுவதில்லை. 21 ஏக்கர் பரந்து விரிந்த பூமியில் பப்பாளி, திராட்சை, சப்போட்டா, மா, கொய்யா ரகங்கள் வரிசை கட்டி நிற்கின்றன. தோட்டத்திலேயே கிடைமாடுகளுக்கு நிரந்தர இடம் ஒதுக்கி, அவற்றின் சாணத்தை சேகரிக்கிறேன். மாடுகளுக்காக சிறிய குளம் அமைத்துள்ளேன். மலைப்பகுதியில் மேய்ச்சல் முடிந்து, இரவில் இங்கே இளைப்பாறும். மாட்டுச்சாணம், கோமியம், உளுந்து பயறு, நாட்டு சர்க்கரையுடன் கரைசலை ஊற்றப் போகும் இடத்தின் மண்ணையும் கலந்து 48 மணி நேரம் ஊறவைப்பேன். இதுதான் ஜீவார்மித கரைசல். மண்ணையும், என்னையும் வாழவைக்கிறது.

புளித்த தயிரை தண்ணீரில் கரைத்து தெளித்தால், செடிகளுக்கு நல்ல கிரியாஊக்கியாக செயல்படுகிறது. பூச்சி தாக்குதல் இருந்தால் அக்னி அஸ்திரம் இருக்கவே இருக்கிறது.

இஞ்சி, பூண்டு, பச்சைமிளகாய் பொருட்களை அரைத்து தண்ணீரில் கரைத்து வடிகட்டி செடிகளுக்கு தெளிப்பேன். திராட்சை கொடிகளுக்கு கீழே, கடலை சாகுபடி செய்துள்ளேன். அதேபோல, தக்கைப்பூண்டு, கொழிஞ்சி, பசுந்தாள் உரங்களை பயிரிட்டு, அவற்றை அப்படியே பறித்து போட்டால், உரமாகிறது. திராட்சையில் பழச் சீசனில் இலைகள் உதிரும். அவற்றை அப்படியே மண்ணில் மட்கச் செய்து உரமாக்கி விடுவேன். திராட்சை செடிக்கு பசுந்தாளும், பசுந்தாளுக்கு திராட்சை இலைகளும் நல்ல உரம் தான். வாழையில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க உள்ளேன். எல்லாமே நாட்டு ரகம் தான். மலையில் மழைபெய்தால் அங்கிருந்து வரும் நீர், என் தோட்டத்திற்கு தான் முதலில் பாய்கிறது. சுத்தமான தண்ணீராக இருப்பதால், தோட்டத்திற்கு வளம் சேர்க்கிறது. என் தோட்டத்தின் மண்ணெல்லாம் மெத்தை போன்று மிருதுவாக இருக்கும். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இயற்கை விவசாயத்தை மட்டுமே நம்பியிருப்பதால், மண்ணும் மிருதுவாகி விட்டது. தனியாக மண்புழு உரம் இடுவதில்லை. தோட்டத்து மண்ணைத் தோன்றினால் பொது பொதுவென்று மண்புழுக்கள் உதிரும். மண் நன்றாக இருந்தால் தானே, புழுக்கள் உயிரோடு இருக்கும். மண்ணும் வளமாக, உயிரோடு இருப்பதால் திராட்சையின் தரம் நன்றாக இருக்கிறது. இதுவே, ஏற்றுமதிக்கான வாய்ப்பையும் பெற்றுத் தந்தது என்கிறார், ஜானகிராமன்.

**இவரிடம் பேச: 91500 09998.**

---

## விதைபரிசோதனைக்கான விதிமுறைகள்

தூத்துக்குடி : விதைப் பரிசோதனை ஆய்வகத்திற்கு விதை மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பும் போது விதிமுறைகளை கடைபிடிக்கவேண்டும். இது குறித்து தூத்துக்குடி விதைப்பரிசோதனை அலுவலர்கள் ரெனால்டா ரமணி மற்றும் நெடுஞ்செழியன் தெரிவிப்பதாவது- விதைக்குவியலில் இருந்து நெல்விதை 400 கிராம், சோளம், தக்கைப்பூண்டு மற்றும் சோளம் விதை 900 கிராம், கம்பு, மிளகாய், கத்தரி, தலா 150 கிராம் வீதமும் மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு மாதிரிகளை துணிப்பையில் எடுத்து விபரச்சீட்டு அதனுள் வைக்கப்படவேண்டும். விபரச் சீட்டில் பயிர், ரகம், குவியல் எண், அறுவடை தேதி உள்ளிட்ட விபரங்கள் அனுப்புநரின் முழு முகவரியிடப்பட்ட முகப்புக் கடிதமும் இணைத்து, ஒரு மாதிரிக்கு ரூ. 30 செலுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

---

## பாசனநீர் கும்பப்பூ சாகுபடிக்கு கைகொடுக்குமா : விவசாயிகள் கலக்கம்

நாகர்கோவில் : கும்பப்பூ சாகுபடி துவங்க உள்ள நிலையில் குமரி அணைகளில் உள்ள பாசனநீர் கைகொடுக்குமா என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. பரவலாக சாரல்மழை பொழிந்தாலும் கனமழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தின் நீர் ஆதாரமாக விளங்கும் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் கடந்த கன்னிப்பூ சாகுபடி நேரத்தில் போதிய நீர்மட்டம் இல்லை என்ற கவலை விவசாயிகள் மத்தியில் இருந்தது. ஆனால் அவ்வப்போது பெய்த மழையால் அணைகளில் நீர்மட்டம் ஓரளவு உயர்ந்தது. இதனால் கன்னிப்பூ சாகுபடியில் பாதிப்பில்லாமல் இருந்தது. தற்போது அறுவடை நடந்து வருகிறது. இந்நிலையில் அடுத்த மாதத்தில் இருந்து கும்பப்பூ சாகுபடிக்கான பணிகள் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரம் தற்போது பெய்து வரும் மிதமான சாரல் மழையால் அணைநீர் மட்டம் வெகுவாக உயருமா என்ற கலக்கத்தில் விவசாயிகள் உள்ளனர். நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறையில் 21.95 அடி, பெருஞ்சாணியில் 58.65 அடி நீர்மட்டம் இருந்தன. பேச்சிப்பாறைக்கு உள்வரத்தாக 423 கனஅடி தண்ணீர் வரும் நிலையில் 289 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெருஞ்சாணி அணைக்கு உள்வரத்தாக 444 கனஅடி தண்ணீர் வரும் நிலையில் 206 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. தினமும் வானம் மேகமூட்டத்துடனும் சாரல் மழை பொழிந்தாலும் அணைநீர் பெருகும் வகையில் கனமழை பெய்யாதது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்து வருகிறது.

அறுவடை துவங்கியுள்ள இப்பருவத்திலே விதை நெல் பாவும் பணி துவங்குவது இயல்பு. ஆனால் கும்பப்பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பாசனநீர் கைகொடுக்குமா என்ற சந்தேகத்தில் அடுத்த நெல் சாகுபடி குறித்து குழம்பி கொண்டிருக்கின்றனர். வடக்கு மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழை குமரி மாவட்டத்தில் மந்தமாக காணப்படுகிறது. அதிகபட்சமாக பாலமோரில் 38.2 மி.மீ., மழை பெய்திருந்தது.

நாகர்கோவிலில் 5.3, பூதபாண்டியில் 10, சுருளோட்டில் 17, கன்னிமாரில் 12.8, ஆரல்வாய்மொழியில் 3.6, மயிலாடியில் 7.8, இரணியலில் 10, ஆனைக்கிடங்கில் 18.2,

குளச்சலில் 6.4, குருந்தன்கோட்டில் 5.8, அடையாமடையில் 25, கோழிப்போர் விளையில் 27, பேச்சிப்பாறையில் 22.2, பெருஞ்சாணியில் 10.8, சிற்றார் ஒன்றில் 3, சிற்றார் இரண்டில் 5.4, பொய்கையில் 3.5, முள்ளங்கினாவிளையில் 17, புத்தன் அøயில் 11.2, மாம்பழத்துறையாறில் 18 மி.மீ., மழை நேற்று பதிவாகியிருந்தது.

இதற்கிடையே குடிநீர் தேவைக்காக பேச்சிப்பாறை தண்ணீரை நாகர்கோவில் நகராட்சிக்கு பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதை நிரந்தரமாக்கும் திட்டத்திற்கு குமரி மாவட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். கும்பப்பூ சாகுபடி பணிகள் விரைவில் துவங்கவுள்ள நிலையில் விதைநெல் போதிய கையிருப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே விதைநெல் தட்டுப்பாடின்றி கிடைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

விவசாயிகள் எதிர்பார்ப்புகள் ஒருபுறம் இப்படி இருக்க, கன்னிப்பூ அறுவடை துவங்கியுள்ள நிலையில் அவ்வப்போது பெய்து வரும் மழையால் அறுவடை பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலமான கேரளாவில் கனமழை கொட்டி வருகிறது. எனவே குமரி மாவட்டத்திலும் இன்னும் சில தினங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பரவலாக மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்தால் மட்டுமே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் நல்ல நீர்மட்டத்தை எட்டி கும்பப்பூ சாகுபடிக்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தளைச்சத்துக்கான சணல் விதை கடும் தட்டுப்பாடு : கும்பப்பூ சாகுபடிக்கான விதை நெல் போதிய இருப்பு இல்லை என்ற குற்றச்சாட்டு நிகழ்ந்துள்ள நிலையில், ஏற்கனவே தோப்புகளில் விதைப்பதற்காக உள்ள சணல் விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர். குமரி மாவட்டத்தில் உள்ள 9 யூனியன் வாரியாக சணல் விதைகள் வினியோகம் நடந்து வந்தது. தற்போது அவை கையிருப்பில்லை. தற்போது சணல் விதையை பாவுவதற்கான சீசன் சிறப்பாக இருக்கும் நிலையில் அவை கிடைக்காதது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில், மழை சீசன் நேரத்தில்தான் சணல் விதை வினியோகம் செய்வது இயல்பு. அடுத்த அக்டோபர் மாதம் இவ்விதைகள் வந்துவிடும் என்றார். தென்னை, மற்றும் பிற விவசாய பயிர்களுக்கு நல்ல தளை சத்தை கொடுக்கும் சணல்

விதை எந்த சீசனிலும் தட்டுப்பாடின்றி கிடைக்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே விவசாயிகளின் விருப்பமாகும்.

---

## கண்மாயை ஆக்கிரமித்து விவசாயம் தண்ணீர் தேக்க முடியாத அவலம்

முதுகுளத்தூர்:முதுகுளத்தூர் கண்மாயை ஆக்கிரமித்து விவசாயம் செய்யப்படுவதால், மழை காலங்களில் தண்ணீர் தேக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முதுகுளத்தூர் பெரிய கண்மாயால் மு.தூரி, மேல, கீழச்சாக்குளம், கடம்பன்குளம் உட்பட பல கிராமங்களிலுள்ள, 3,000 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் பயனடைந்து வருகின்றன.

இந்த கண்மாய் ஆக்கிரமிக்கபட்டு விவசாயம் செய்யப்படுகிறது. பல இடங்களில் வளர்ந்துள்ள கருவேல மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டபட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 10 லட்ச ரூபாய் இழப்பு ஏற்படுகிறது.மழை காலங்களில் தண்ணீரை சேமிக்க இயலவில்லை. பிற விவசாயிகளின் எதிர்காலம், கேள்விக்குறியாகி வருகிறது. பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""கண்மாயில் ஆக்கிரமிப்புகளை அகற்ற, வருவாய்துறையினருக்கு தெரிவித்துள்ளோம். திருட்டுத்தனமாக கருவேல மரங்களை வெட்டி கடத்துவோர் மீது, வனத்துறை மூலம் நடவடிக்கை வலியுறுத்தி உள்ளோம்," என்றார்.

---

## விவசாயத்திற்கு வங்கிக் கடன் அதிகரிப்பு: அமைச்சர் பேட்டி

சிவகங்கை:விவசாயம்,தொழில் வளர்ச்சிக்கு வங்கி கடனுதவியை அதிகரிக்க வலியுறுத்துவோம் என, மத்திய தொழில், வர்த்தக இணை அமைச்சர் சுதர்சனநாச்சியப்பன் கூறினார்.
சிவகங்கையில் அவர் கூறியதாவது:
சிவகங்கையில், மிளகு, மல்லி, மஞ்சள் பொருட்களை சுத்தமாக்கி, பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் "ஸ்பைசஸ் பூங்கா' திறக்கப்படாமல் இருந்தது. ரூ.20 கோடி நிதி ஒதுக்கி, அக்.,முதல் வாரத்தில் திறக்கப்படும். மிளகாய் உற்பத்தியில் சிவகங்கை மாவட்டம் 1990ல் முதலிடத்தில் இருந்தது. தற்போது,6 வது இடத்தில் உள்ள மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெரம்பலூர்-மானாமதுரை, புதுக் கோட்டை-ராமநாதபுரம் நான்கு வழிச்சாலை பணிக்கு டெண்டர்

முடிந்த நிலையில், விரைவில் பணி துவங்கப்படுகிறது. மதுரையில் வெளிநாட்டு விமானங்கள் வந்திறங்க நடவடிக்கை எடுக்கப்படும். திருச்சியில் ரூ.102 கோடியில் பெல் நிறுவனத்திற்கான பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலை துவங்குவதற்கு தமிழக அரசின் அனுமதிக்கு காத்திருக்கிறோம். விவசாயம்,தொழில் வளர்ச்சிக்கு வங்கி கடனுதவியை அதிகரிக்க வலியுறுத்துவோம். இது தொடர்பாக வங்கியாளர்கள் அழைத்து ஆலோசிக்கப்படும், என்றார்.

---

### கோமாரி தடுப்பூசி முகாம் துவக்கம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், கோமாரி தடுப்பூசி முகாம், இன்று முதல் நடை-பெற உள்ளது என, கால்நடை இணை இயக்குனர் கோவர்த்தனன் தெரிவித்து உள்ளார். அவரது அறிக்கை:

வட கிழக்கு பருவ மழை துவங்க உள்ளதால், பருவ நிலை மாற்றத்தின் காரணமாக ஆடு, மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதை தடுக்கும் வகையில், மாவட்டம் முழுவதும், கால்நடைகளுக்கு, கோமாரி தடுப்பு மருத்துவ முகாம்கள் இன்று முதல், கால்நடை உதவி மருத்துவமனைகளில் நடைபெற உள்ளது. அரசு திட்டத்தில், இலவச கால்நடைகள் பெற்றவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பா-ளர்கள் தங்களின் ஆடு, மாடுகளுக்கு, இந்த முகாமில் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### தக்காளி விலை மழையால் இரட்டிப்பு

ஆர்.கே.பேட்டை:தொடர் மழையின் காரணமாக, தக்காளி விலை இரு மடங்காக உயர்ந்-துள்ளது.

கடந்த, ஒரு வார காலமாக, தொடர்ந்து, மழை பெய்து வருகிறது. தக்காளி செடிகளின் தண்டு மென்னையானது என்பதால், தோட்டத்தில் கொம்புகளின் உதவியுடன், செடிகள் கட்டி வைக்கப்பட்டிருக்கும்.

தொடர் மழையினால், வயல்களில் தண்ணீர் தேங்கியதில், கொம்புகள் சாய்ந்து விட்டன. இதன் காரணமாக தக்காளி செடிகள் பெருமளவு சேதமடைந்தது. இதனால், தக்காளி வரத்தும், குறைந்து விட்டன.

ஆர்.கே.பேட்டை, வார சந்தையில், கடந்த வாரம் வரை, தக்காளி கிலோ, 10 முதல் 15

ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று, 20 முதல் 30 ரூபாய் வரை விலை உயர்ந்தது.

இதுகுறித்து, வியாபாரிகள் கூறுகையில், ‘மழை காரணமாக, உள்ளூர் தக்காளி வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கர்நாடக மாநிலம், நங்கிலி பகுதியில் இருந்து, தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு, சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. போக்குவரத்து செலவு காரணமாக, தக்காளி விலை இரட்டிப்பாக உயர்ந்து உள்ளது’ என்றனர்.

---

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்:மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், 20ம் தேதி நடைபெற உள்ளது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 20ம் தேதி, ஆட்சியர் அலுவ-லகத்தில், காலை, 11:00 மணியளவில் நடைபெற உள்ளது. ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில், நடைபெறவுள்ள கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள, வேளாண்மை, தோட்-டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உள்ளிட்ட, அனைத்து துறை அலுவலரும் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு, தீர்வு காண உள்ளனர். எனவே, இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்ள்ளார்.

---

### தழைச்சத்து: விவசாயிகள் ஆர்வம்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், அடியுரமாக சணப்பை பயிர் செய்வதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.நெல் சாகுபடிக்கு தழைச்சத்து, மணிச் சத்து மற்றும் சாம்பல் சத்துகள் நிறைந்த உரங்களை பயன்படுத்தப்படுகிறது. இதில் தழைச் சத்துகள் மிகுந்த சணப்பை பயிர் சாகுபடி செய்யப்படும் வயலில், தேவையற்ற களையும் கட்டுப்படுத்தப்படும். மேலும் உரங்களின் விலை உயர்வு மற்றும் நிலத்தில் சத்துகள் குறைவு போன்றவற்றால், விளைச்சலின் அளவு குறைந்து வருகிறது.இவற்றை தவிர்க்க, நெல் சாகுபடியில் ஈடுபடும் விவ சாயிகள் பலர், தற்போது தங்கள் நிலங்களில் சணப்பை பயிர் செய்துள் ளனர். 30 முதல் 40 நாட்களுக்குள் சணப்பை பயிர் உள்ள வயலை, டிராக்டர் மூலம் உழுவதால், நிலத்திற்கு இயற்கை சத்துகள் கிடைக்கின்றன. கூடுதல் விளைச்சல் கிடைப்பதால், விவசாயிகள் பலரும் ஆர்வமுடன், சணப்பை பயிர்களை நிலத்தில் விதைத்து வருகின்றனர்.

---

### வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

சேலம்: சேலம், பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு, 650 மூட்டை மஞ்சள், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. சேலம், பள்ளப்பட்டியில் உள்ள, சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. சேலம் மாவட்டத்தை சேர்ந்த காமலாபுரம், கருப்பூர், வெள்ளாளப்பட்டி, வாழப்பாடி, குறிச்சி மற்றும் அரூர், கிருஷ்ணாபுரம், தும்பல், பெரம்பலூர், சின்ன சேலம் மற்றும் நாமகிரிபேட்டை பகுதியை சேர்ந்த விவசாயிகள், கூட்டுறவு சங்கத்துக்கு மஞ்சள் மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். சேலம், ஈரோட்டை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் மஞ்சளை வாங்கினர். நேற்று நடந்த ஏலத்துக்கு, 650 மூட்டை மஞ்சள் வரத்தானது. ஒரு குவிண்டால் விரளி மஞ்சள் அதிகபட்சமாக, 6,599 ரூபாய், குறைந்தபட்சமாக, 4,411 ரூபாய்க்கும், குண்டு மஞ்சள், ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 5,300 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 3,861 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி மஞ்சள், ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 8,779 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 4,559 ரூபாய்க்கும் விற்பனையானது. சேலம் வேளாண் விற்பனையாளர் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம், 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

---

### ஏரி பாசன கால்வாய் சீர் செய்ய விவசாயிகள் கோரிக்கை

தர்மபுரி: தர்மபுரி அடுத்த அதியமான்கோட்டை ஏரி கால்வாயை சீர் செய்ய விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதியமான்கோட்டை ஏரியின் மூலம், 109 ஹெக்டேர் பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரி பாசன கால்வாயில் பல இடங்களில் சேதமாகியிருப்பதோடு, சில விவசாயிகள் பாசன கால்வாயை மூடி அவ்வழியாக தங்களது விவசாய நிலங்களுக்கு வாகனங்களில் சென்று வருகின்றனர். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் அதியமான்கோட்டை ஏரி உட்பட மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. விரைவில் ஏரி நிரம்பும் நிலையுள்ளது. ஏரியில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டால், சேதமான கால்வாய் மூலம் கடை கோடி பகுதிக்கு தண்ணீர் செல்வது தடை ஏற்படும் நிலையுள்ளது. எனவே, சேதமான பாசன கால்வாய்களை சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.09.2013**

## 2013-2014-ம் நிதிஆண்டில் சர்க்கரை உற்பத்தி ரூ.2.50 கோடி டன் அதிகரிக்க வாய்ப்பு



2013-2014 சந்தை படுத்தும் பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி ரூ.2.50 கோடி டன்னாக இருக்கும் என்றும் சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்ததை விட சிறப்பாக பெய்துள்ளது. பல இடங்களில் கரும்பு விளைச்சலும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வரும் அக்டோபர் மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் வரையிலான சந்தை படுத்தும் பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி ரூ.2.50 கோடி டன்னாக அதிகரிக்கும் என சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது நடப்பு சந்தை படுத்தும் பருவத்தில் ரூ.2.45 கோடி டன்னாக உள்ளது குறிப்பிடத்தக்கது. வரும் சந்தை படுத்தும் பருவத்தில் அதிகபட்சமாக மகாராஷ்டிரா மாநிலம் ரூ.78லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து முதல் இடத்தை தக்க வைக்கும் என்று எதிர்பார்ப்பதாக சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இதே போன்று உத்திரபிரதேசம் மாநிலம் ரூ.77லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து இரண்டாம் இடத்தை தக்க வைத்துக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இது நடப்பு சந்தை படுத்தும் பருவத்தைவிடவும் குறைவான அளவே என்றும் உத்திரபிரதேசம் முழுவதும் கனமழை காரணமாக பல இடங்களில் கரும்பு விளைச்சல் பாதிக்கப்படும் சூழலே இதற்கு காரணம் என்றும் சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. இதனை தொடர்ந்து கர்நாடக மாநிலம் சர்க்கரை உற்பத்தி ரூ.34லட்சம் டன்னாக இருக்க வாய்ப்புள்ளதாகவும் சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு சுட்டிகாட்டியுள்ளது.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 18.09.2013

## ஊத்துக்கோட்டை பகுதியில் பலத்தமழை ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு



ஊத்துக்கோட்டை, வரண்டு கிடந்த ஊத்துக்கோட்டை ஆரணி ஆற்று தரை பாலத்தில் வெள்ளநீர் பாய்ந்து செல்வதை படத்தில் காணலாம்.

ஊத்துக்கோட்டை பகுதியில் பெய்த மழையால் ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>ஆரணி ஆற்றில் வெள்ளம்</u>

ஆந்திர மாநிலம் பிச்சாட்டூரில் ஆரணி நீர்தேக்கம் உள்ளது. இங்கு சேமிக்கப்படும் தண்ணீரை ஆரணி ஆற்றில் திறந்து விடுவது வழக்கம். இப்படி திறந்து விடும் தண்ணீர் நாகலாபரம், சுருட்டபள்ளி, ஊத்துக்கோட்டை, பெரியபாளையம், ஆரணி, பொன்னேரி வழியாக பாய்ந்து பழவேற்காடு பகுதியில் வங்கக்கடலில் கலக்கிறது.

இந்த ஆரணி ஆற்றில் நந்தனம் எனும் கிளை நதி வந்து கலக்கிறது. ஆந்திர மாநிலம் மற்றும் ஊத்துக்கோட்டை சுற்று வட்டார பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக நந்தனம் கிளை நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இது ஆரணி ஆற்றில் கலப்பதால் ஆரணி ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

இதனால் வறண்டு கிடந்த ஊத்துக்கோட்டை ஆரணி ஆற்று தரை பாலத்தில் சுமார் 4 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்கிறது. தரை பாலத்தில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் தடுப்பு அணை உள்ளது. நந்தனம் ஆற்று தண்ணீர் இங்கு சேமிக்கப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மேலும் ஊத்துக்கோட்டை நகர எல்லையில் ஆரணி ஆற்றில் அமைக்கப்பட்டு உள்ள ராட்சத போர் கிணறுகளில் இருந்துதான் தற்போது நகரத்தில் குடி தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. தடுப்பு அணைக்கு மிக அருகில் போர் கிணறுகள் உள்ளதால் அவற்றில் நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்றபட்டு உள்ளதால் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

---

## சேலம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை



சேலம்,

சேலம் பள்ளப்பட்டியில் உள்ள வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில் நேற்று ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை செய்யப்பட்டது.

மஞ்சள் ஏலம்

சேலம் பள்ளப்பட்டியில் இயங்கி வரும் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் மஞ்சள் மூட்டைகள் ஏலத்தில் விடப்பட்டு, விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நேற்று அங்கு காமலாபுரம், பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, கூட்டாத்துப்பட்டி, குறிச்சி, பேரூர், வெள்ளாளப்பட்டி, மின்னாம்பள்ளி, நீர்மூழ்கி குட்டை ஆகிய பகுதிகளில் இருந்து 100–க்கும் மேற்பட்ட விவசாயிகள் 650 மூட்டை மஞ்சளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.25 லட்சத்துக்கு ஏலம்

அதைத்தொடர்ந்து அம்மூட்டைகள் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. இதில் விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு அதிக பட்சமாக ரூ.6,599–க்கும், குறைந்த பட்சமாக ரூ.4,411–க்கும் விற்பனை செய்யப்பட்டது. குண்டு மஞ்சள் குவிண்டாலுக்கு அதிக பட்சமாக ரூ.5,300–க்கும், குறைந்த பட்சமாக ரூ.3,661–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

பனங்காலி மஞ்சள் குவிண்டாலுக்கு அதிக பட்சமாக ரூ.8,777–க்கும், குறைந்த பட்சமாக ரூ.4,559–க்கும் விற்பனை ஆனது. ஆக மொத்தம் 650 மூட்டை மஞ்சளும் ரூ.25 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனை ஆனது. சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஆத்தூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். விவசாயிகளுக்கு பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்பட்டது.

---

## உணவு உற்பத்தியை மேம்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் வேளாண்மை துறை இயக்குனர் பேச்சு



மன்னார்குடி,

உணவு உற்பத்தியை மேம்படுத்த இளைஞர் கள் முன்வர வேண்டும் என்று வேளாண்மை துறை துணை இயக்குனர் மயில்வாகனன் கூறி னார்.

<u>கருத்தரங்கம்</u>

மன்னார்குடியில் நவீன வேளாண்மை பற்றிய கருத்தரங்கம் நடை பெற்றது. ஜே.சீ.ஐ. தலைவர் சுதாகர் தலைமை தாங்கினார். செயலாளர் கைலாஷ், திட்ட இயக்குனர்கள் சரவணன், நேதாஜிபிரபு, பூமிநாதன், பாலாஜி ஆகியோர் முன் னிலை வகித்தனர். கருத்தரங் கில் நவீன வேளாண்மை குறித்து திருவாரூர் மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் மயில்வாகனன் பேசினார்.

அப்போவது அவர் கூறிய தாவது:–

வேளாண்மைத்தொழில் எந்திரமயமாகி வருகிறது. இந்த தொழிலை வளர்த்தெ டுக்க நேரடியாக வேளாண்மை யில் ஈடுபடவேண்டும் என்பது இல்லை. அதுசார்ந்த விற் பனை கூடங்கள், அல்லது நவீன கருவிகளை கண்டறிதல், சாகுபடி தொழில் நுட்பங்களை கண்டறிதல் போன்றவற்றில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

<u>முன்வர வேண்டும்</u>

தமிழகத்தின் நெல்உற்பத்தி யில் 25 சதவீத உற்பத்தியை காவிரி டெல்டா விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். இருப் பினும் விவசாயிகளின் வாரிசு கள் படிப்பு முடித்து வேறு தொழிலுக்கு சென்று விடு கின்றனர். அதுபோல் இல் லாமல் படித்திருக்கின்ற படிப் பறிவை வைத்து உணவு உற் பத்தியை மேம்படுத்த தேவை யான முயற்சியை மேற்கொள்ள இளைஞர்கள் முன் வர வேண் டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கில் மன்னார்குடி வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் உத்திராபதி, திருத் துறைப்பூண்டி கிரியேட் நிறு வன பயிற்சி இயக்குனர் ஜெய ராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பண்ணை குட்டை மூலம் மழை நீர் சேகரிப்பு தீவிரம் 2,651 சிறு, குறு விவசாயிகளின் பட்டியல் தயார்



திண்டுக்கல்,

திண்டுக்கல் மாவட்டத்தில் பண்ணை குட்டை மூலம் மழை நீர் சேகரிப்பதற்கு 2,651 சிறு, குறு விவசாயிகளின் பட்டியல்களை வேளாண்மைத்துறை அதிகாரிகள் தயார் செய்துள்ளனர்.

மழை அளவு குறைவு

திண்டுக்கல் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை அளவு குறைந்து உள்ளது. தற்போது இந்த மழை காலம் முடிவடையும் நிலையில் உள்ளது. மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 836 மில்லி மீட்டர் ஆகும். அதில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரை பெய்யும் வடகிழக்கு பருவமழையின் சராசரி அளவு 417 மில்லி மீட்டர். ஆனால் இந்த மழை அளவு கடந்த சில ஆண்டுகளாக குறைந்து கொண்டே வருகிறது.

2,651 சிறு, குறு விவசாயிகள்

இதனால் மாவட்டத்தில் விவசாய நிலங்களுக்கு தேவைப்படும் நிலத்தடி நீர் இல்லாத அளவிற்கு போய்விட்டது. பல்வேறு இடங்களில் விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனை சரி செய்வதற்கு சிறு, குறு விவசாயிகளின் விளைநிலங்களில் மழை நீரை சேகரிப்பதற்கு பண்ணை குட்டை அமைக்கும் திட்டத்தை வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் விவசாய நிலங்களில் மழை நீரை சேமிப்பதற்கு பண்ணை குட்டை அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகள் பயனாளிகள் பட்டியல் தயார் செய்யப்பட்டு உள்ளது. அதில் 2,651 சிறு, குறு விவசாயிகள் தங்கள் நிலங்களில் பண்ணை குட்டை அமைப்பதற்கு விருப்பம் தெரிவித்து மனு கொடுத்து உள்ளனர்.

<u>பண்ணை குட்டைகள்</u>

இந்த பண்ணை குட்டைகளை, 100 நாள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் உள்ள விவசாய கூலி தொழிலாளர்கள் மூலம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. மாவட்டத்தில் திண்டுக்கல், ஆத்தூர், வேடசந்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, பழனி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம், குஜிலியம்பாறை ஆகிய ஒன்றியங்களில் 117 சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து வேளாண்மை அதிகாரியிடம் கேட்ட போது, ‘மாவட்டத்தில் மழை அளவு மிகவும் குறைந்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு தற்போது பெய்யும் மழை நீரை விவசாயிகள் தேக்கி வைப்பதற்கு பண்ணை குட்டை அமைக்க முன்வரவேண்டும். இதற்கு அந்தந்த வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் சிட்டா நகலை இணைத்து விருப்ப மனு அளிக்கவேண்டும். பண்ணை குட்டை அமைப்பதால் நிலத்தடி நீர் அதிகரித்து விளைநிலங்களுக்கு தேவையான நீரை பெற்று பயன்பெறலாம்’ என்றார்.